இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 08-08-2023

# நீதி வென்றது

“நீதி வென்றது” - என்ற இரண்டு சொற்களில் அனைத்தையும் சொல்லி விட்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ராகுல் காந்தியை முடக்குவதன் மூலமாக இந்திய மக்களாட்சியின் மாண்பை முடக்குவதற்கு பிரதமர் நரேந்திர மோடியும் பா.ஜ.க.வும் எடுத்த முயற்சிக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்தது தொடர்பாக அறிக்கை வெளியிட்ட முதலமைச்சர் அவர்கள், ‘நீதி வென்றது’ என்றே இந்தத் தீர்ப்பை அடையாளப்படுத்தினார்.

**“இந்த உத்தரவு நமது நீதித்துறையின் வலிமைமீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையையும், மக்களாட்சியின் மாண்புகளையும் காப்பாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தையும் மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளது” என்பதும் முதலமைச்சரின் கருத்தாகும்.**

ராகுல் காந்தியை பதவி நீக்கம் செய்தது தனிப்பட்ட ராகுல் காந்திக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதி மட்டுமல்ல, ‘எங்களை எதிர்ப்போர் கதி இதுதான்’ என்பதைக் காட்டினார்கள். எதேச்சதிகாரத்தனத்தை மறைமுகமாக அல்ல, வெளிப்படையாகவே காட்டினார்கள்.

எவ்வளவு அவசர அவசரமாக ராகுல் காந்தியின் பதவி பறிக்கப்பட்டது என்பதில் இருந்தே இவர்களது நோக்கத்தை அறியலாம். 2019 ஏப்ரல் 13 அன்று கர்நாடகா மாநிலம் கோலாரில் பேசிய ராகுல் காந்தி, இந்தியாவில் இருந்து தலைமறைவாகிய நீரவ் மோடி, லலித் மோடி ஆகியோரை விமர்சித்துப் பேசினார். ‘மோடி என்று பெயர் வைத்தவர்கள் எல்லாம் இப்படியா?’ என்ற தொனியில் கேள்வி எழுப்பினார். மோடி என்பது குறிப்பிட்ட சமூகத்தின் பெயர் என்பதால் அனைவரையும் கொச்சைப்படுத்தியதாக விமர்சிக்கப்பட்டது. இன்றைய பிரதமர், மோடி என்றே அனைவராலும் அழைக்கப்படுகிறார். முன்னிலைப்படுத்தப்படுகிறார். அந்த வகையில் அந்தச் சொல், இந்தியப் பொதுவெளியில் குறிப்பிட்ட பிரிவின் பெயராக இல்லாமல், பிரதமரின் பெயராகத்தான் அடையாளப்படுத்தப்பட்டு வருகிறது.

ஏப்ரல் 15 ஆம் தேதி சூரத்தைச் சேர்ந்த பா.ஜ.க. எம்.எல்.ஏ. பூர்ணேஷ் மோடி என்பவர், ராகுல் மீது கிரிமினல் அவதூறு வழக்கைத் தொடர்ந்தார். 2023 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதி அன்று ராகுலுக்கு எதிராக தீர்ப்பை வாங்கும் அளவுக்கு வேகவேகமாக நடத்தினார்கள். ராகுல் காந்திக்கு சூரத் பெருநகர நீதிமன்றம் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கிறது. இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் மறுநாளே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுகிறார் ராகுல்.

**தீர்ப்பைத் தந்தது உயர்நீதிமன்றமோ, உச்சநீதி மன்றமோ அல்ல. பெருநகர நீதிமன்றம்தான். இதற்கான மேல் முறையீட்டு விசாரணைகள் உயர் நீதிமன்றத்தில் நடத்தலாம். உச்சநீதிமன்றத்தில் நடத்தலாம். அங்கெல்லாம் உறுதியானால் தான் பதவி நீக்கம் செய்யலாம். ஆனால் ராகுல் காந்தி நாடாளுமன்றத்துக்குள் வர விடக் கூடாதென்ற சதி எண்ணத்தோடு, ஒரு கீழமை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மறுநாளே அமல்படுத்தினார்கள். தீர்ப்பு வந்த 24 மணி நேரத்துக்குள்ளாக ராகுல் காந்தியின் பதவி பறிக்கப்பட்டது.**

சூரத் பெருநகர நீதிமன்ற உத்தரவை எதிர்த்து, அதே நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் ராகுல். அவருக்கு ஜாமின் வழங்கியது நீதிமன்றம். ஆனால் தண்டனையை நிறுத்தி வைக்க மறுத்தது. கீழமை நீதிமன்ற உத்தரவை எதிர்த்து குஜராத் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் ராகுல். அவரது மனுவை தள்ளுபடி செய்தது குஜராத் உயர்நீதிமன்றம். அங்கும் அது, எதிர்பார்த்ததுதான்.

**குஜராத் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தார் ராகுல். இந்த வழக்கை நீதிபதிகள் பி.ஆர்.கவாய், பி.எஸ்.நரசிம்மா, சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து ஆகஸ்ட் 4 அன்று தீர்ப்பைத் தந்துள்ளது. ‘ராகுல் காந்திக்கு தரப்பட்ட சிறைத் தண்டனைக்குத் தடை’ விதித்துள்ளது உச்சநீதிமன்றம்.**

“ராகுல் காந்தியின் உரை நல்ல ரசனையுடன் இல்லை என்பதில் சந்தேகமில்லை. பொதுவாழ்க்கையில் இருப்பவர்கள், பொது வெளியில் பேசும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்” என்பதையும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள். அதே நேரத்தில் ராகுல் காந்திக்கு வழங்கப்பட்ட தண்டனை மிக அதிகம் என்பதைச் சொல்லி இருக்கிறார்கள்.

“அதிகபட்ச தண்டனையான 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க என்ன காரணம் என்பதை தீர்ப்பளித்த நீதிபதி சொல்லவில்லை. தண்டனைக் காலத்தை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு நாள் குறைவாக தந்திருந்தாலும் ராகுல் காந்தி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்திருக்க மாட்டார்” என்று உச்சநீதிமன்றம் சுட்டிக் காட்டியதில் தான் இந்த பிரச்சினையின் மறைமுக அம்சங்கள் அடங்கி இருக்கின்றன.

“ராகுல் காந்தி பொதுவாழ்வில் தொடர்வதற்கான உரிமையை மட்டுமின்றி, அவரைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களையும் பாதித்துள்ளது” என்றும் நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.

**மக்களாட்சி மாண்பை உணர்த்தியதன் மூலமாக உச்சநீதி மன்றத்தின் மீதான நம்பிக்கையும் உயர்ந்துள்ளது. அடுத்ததாக நாடாளுமன்றம் தனது மாண்பை உணர்த்த வேண்டும். ராகுல் காந்தியை தகுதி நீக்கம் செய்யும் நடவடிக்கைகள் அனைத்தும் 24 மணி நேரத்தில் நடத்தி முடித்தார்கள். அவரின் சிறைத் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதன் மூலமாக ராகுல் காந்தி நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடரும் அனுமதி கிடைத்துவிட்டது. இதனை ஏற்று பறிக்கப்பட்ட எம்.பி. தகுதி மீண்டும் தரப்பட வேண்டும். மீண்டும் நாடாளுமன்றத்தில் ராகுல் குரல் ஒலிக்க வேண்டும். வாக்களித்த வயநாடு மக்களின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும். இவை அனைத்துக்கும் மேலாக பா.ஜ.க.வின் எதேச்சதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.**




சென்னைப் பல்கலைக்கழகத்தில், நேற்று முன்தினம் (6.8.2023) இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் 165வது பட்டமளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார். உடன் தமிழ்நாடு ஆளுநரும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான ஆர்.என்.ரவி, உயர்கல்வித் துறை அமைச்சரும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான முனைவர் க. பொன்முடி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ச.கௌரி, ஆட்சிப் பேரவை மற்றும் ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.8.2023) சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான் 2023 பரிசளிப்பு விழாவில், இம்மாரத்தான் போட்டியில் கலந்து கொண்டவர்கள் பதிவு கட்டணமாக செலுத்திய 3 கோடியே 42 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சை மையத்திற்கு வழங்கிடும் வகையில், அக்காசோலையை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஆகியோரிடம் வழங்கினார். இவ்விழாவில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தூதர்கள், ‘தி இந்து’ குழுமத்தின் இயக்குநர் என்.ராம், அப்போலோ மருத்துவமனையின் துணைத் தலைவர் டாக்டர் பிரீத்தா ரெட்டி, காவேரி மருத்துவமனையின் தலைவர் சந்திரகுமார், இந்தியன் ஓவர்சிஸ் வங்கியின் மேலாண்மை இயக்குநர் அஜய்குமார், பல்வேறு மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அரியலூர் மாவட்டம் -

# கங்கைகொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகம் அமைய உள்ள இடம்!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்!

அரியலூர், ஆக. 8 -

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில் அரசு அருங்காட்சியகம் அமையவுள்ள இடத்தினை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம்தென்னரசு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை அரசு முதன்மைச் செயலாளர் க.மணிவாசன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அருங்காட்சியக ஆணையர் அரவிந்த், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் அரசு அருங்காட்சியகம் அமையவுள்ள இடத்தினை ஆய்வு செய்த பின் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கங்கைகொண்ட சோழபுரத்தில் தமிழ்நாடு அரசின் தொல்லியல்துறையின் சார்பாக அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே இந்த அகழாய்வு பணிகளை தொடங்கி வைத்து இங்கே கண்டெடுக்கப்பட்டுள்ள பொருட்களை நேரடியாக பார்வையிட்டுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக உலக புகழ் வாய்ந்த கங்கைகொண்ட சோழபுரம் கோவில் ஒட்டியுள்ள பகுதிகளில் நடைபெறக் கூடிய இந்த அகழாய்வுப் பணிகள் இந்த கோவிலின் உடைய முக்கியத்துவம், குறிப்பாக சோழப் பெருவேந்தர்களில் தனக்கென மிகப்பெரிய இடத்தினை பிடித்த மாமன்னன் இராஜேந்திர சோழனுடைய பெருமையை பறைசாற்றும் வகையில் கங்கைகொண்ட சோழபுரத்தில் உலகத் தரத்திலான ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு செய்திருந்தார்கள்.

மேலும், இந்த அருங்காட்சியகம் எங்கே அமைந்தால் சிறப்பாக இருக்கும் என்பதற்கான அந்த இடத்தை தேர்வு செய்யும் பொருட்டு இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி கங்கைகொண்ட சோழபுரம் கோவிலின் அருகில் உள்ள இடத்தினையும், குருவாலப்பர்கோவில் அருகே உள்ள மற்றொரு இடத்தினையும் நேரடியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இரண்டு இடங்களில் எந்த இடம் மிகவும் சிறப்பாக இருக்கும், அதிகப்படியான பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் இருக்கும் என்பதை முடிவு செய்து பணிகள் துவங்கப்படும்.

இந்த திட்டம் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேரடியாக ஆய்வு செய்யக்கூடிய தனித்துவமான திட்டங்களில் வரக் கூடிய ஒன்றாகும். இத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதி மிக விரைவில் பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மக்களை கவரக்கூடிய வகையில், சிறந்த முறையில், உலகத் தரத்தில் இந்த அருங்காட்சியகம் அமைய வேண்டும்.

மேலும், இது சோழர்களின் புகழை குறிப்பாக இராஜேந்திர சோழனுடைய புகழை பறைசாற்றும் வகையிலும், கங்கைகொண்ட சோழபுரத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையிலும் அமையவேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார் என நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

பின்னர், மாளிகைமேடு பகுதியில் நடைபெற்று வரும் அகழாய்வு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து பின்னர் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பழமையான பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு பொருட்களின் விவரம் குறித்து கேட்டறிந்தும், தொடர்ந்து உட்கோட்டை பகுதியில் நடைபெறும் அகழாய்வு பணிகளை பார்வையிட்டு அகழாய்வு பணியில் கண்டெடுக்கப்பட்ட மதில் சுவருக்கு நிறுத்தப்பட்டதாக கருதப்படும் 7 மீ நீளம், 72 செ.மீ அகலமுடைய கல்தூணினை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வில் அகழாய்வு பணிகள் இணை இயக்குநர் (சென்னை) சிவானந்தம், இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் (கடலூர்) பரணிதரன், அகழாய்வு பணிகள் இயக்குநர் பிரபாகரன், துணை இயக்குநர் பாக்கியலெட்சுமி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், சுற்றுலா அலுவலர் நெல்சன், கழக சட்டத் திட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் இராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் தனசேகர், இரா.மணிமாறன், பூ.செல்வராஜ், ஆர்.கலியபெருமாள், நகரச் செயலாளர் வெ.கொ. கருணாநிதி, பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.ஷாஜகான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர். இராமராஜன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் எஸ்.கே.பி.சங்கரன், சிவபிரகாசம், முல்லைநாதன், ஒன்றியக் கவுன்சிலர்கள் பிரிதிவிராஜன், சிவகுமார், மாவட்ட தகவல்தொழில்நுட்ப அணி அமைப்பாளர் குலோத்துங்கன், அருள்செல்வன், ச.வசந்தபகலவன், வீர.சிவா, முரசொலிகுமார், பா.ரமேஷ், ஆ. கரிகாலன், பாலமுருகன், ஆனந்த் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், கங்கைகொண்ட சோழபுரம் அருகே குருவாலப்பர்கோவில் பகுதியில் அருங்காட்சியகம் அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை அரசு முதன்மை செயலாளர் க.மணிவாசன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அருங்காட்சியக ஆணையர் அரவிந்த், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.